# ஜேர்மன் தமிழர் ஒன்றியம் – ஜேர்மனி
## Deutsch- Tamilische Gesellschaft e.V.
## GERMAN TAMIL SOCIETY
கல்வி, கலை, விளையாட்டு
Gemeinnütziger Verein für Bildung, Kultur und Sport
– Anerkannter Träger der freien Jugendhilfe –

Deutsch- Tamilische Gesellschaft e.V., Prühßstraße 47, 12105 Berlin

Herr Balachanthiran Balasubramaniam
Prühßstraße 47
12105 Berlin
☎ 030/ 23 90 31 61
030/ 23 90 40 14
0171/ 82 21 565
info@detagegermany.
Web: www.detagegermany.de
Vereinssitz Berlin
Reg: 10012 B
Amtsgericht Charlottenburg


Datum: 15. September 2019
சுற்றறிக்கை 01 - 2019

**தமிழாலய ஆசிரியர்கள் செயற்பாட்டுக்கும், பெற்றோர், மாணவர்களின் கவனத்திற்கும்,**

# தமிழ்த்திறன் போட்டி 2019

எமது தமிழாலயத்தில் 160 க்கு மேற்பட்ட மாணவர்களை ஒருங்கிணைத்து வருடந்தோறும் நடாத்தும் தமிழ்த்திறன் போட்டிகள் இவ்வாண்டும் நடைபெறவுள்ளன. போட்டிகளுக்கான முழுமையான விபரங்களை இச்சுற்றறிக்கை மூலமாக அறியத்தருகின்றோம். இப் போட்டிகளுக்குரிய மதிப்பீட்டுப் படிவங்கள் விரைவில் தமிழாலயத்தில் வழங்கப்படும்.

- போட்டிகளில் அனைத்து மாணவர்களும் பங்குபற்றிப் பயன்பெறுதல் வேண்டும்.
- போட்டிகள் 6 வயது தொடக்கம் 18 வயது வரையிலான மாணவர்களுக்கு தமிழாலயத்தில் நடைபெறும்.
- இத்துடன் இணைக்கப்பட்ட தமிழ்த்திறன் போட்டி படிவத்தை எதிர்வரும் 23.11.2019 ற்கு முன் முழுமையாக பூர்த்தி செய்து வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்கவும்.
- தமிழ்த்திறன் போட்டி 07.12.2019 சனிக்கிழமை நடைபெறும்.
- அனைத்து வயதுப் பிரிவினரும் மனனம், சொல்வதெழுதுதல், உறுப்பமைய எழுதுதல், வாசிப்பு போட்டிகளை கட்டாயமாகத் தெரிவு செய்வதோடு ஏனைய போட்டிகளில் ஏதாவது மூன்று விடயங்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஏழு போட்டிகளில் மாத்திரம் பங்குபற்ற வேண்டும்.

- போட்டிகளில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களும் தமிழாலயச் சீருடையை அணிதல் வேண்டும்.

- இப் போட்டிகள் எமது நிர்வாகியின் ஒருங்கிணைப்பின் கீழ் தமிழாலயத்தின் தமிழ்த்திறன் போட்டிப் பிரிவினரால் நடாத்தப்படும்.

- தமிழ்த்திறன் போட்டிகள் நிறைவு பெற்றபின் நடுவர்களினால் கணிக்கப்பட்ட போட்டிகளின் மதிப்பீட்டுப் படிவங்கள், போட்டிகளின் மதிப்பீட்டுத் தொகுப்பு படிவங்கள், **போட்டி முடிவுகள் அடங்கிய படிவங்கள் அனைத்தும் தமிழாலய காரியாலத்தில் கையளிக்க வேண்டும்.**

- தமிழ்த்திறன் போட்டிகளின் முடிவுகளை நடுவர்கள் உடனே வெளிப்படுத்தாது நிர்வாகியிடம் மாத்திரம் வழங்கவேண்டும். எல்லாப்போட்டிகளின் முடிவுகளையும் பெற்று அவற்றைத் தொகுத்த பின்னர் முடிவுகளை நிர்வாகியும் தமிழ்த்திறன் பிரிவுச் செயற்பாட்டாளரும் இணைந்து வெளிப்படுத்த வேண்டும்.

- போட்டியின்றித் தெரிவாகும் போட்டியாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட விடயத்தை நடுவர்கள்முன் செய்துகாண்பித்து அதற்கு 40 க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

- 40 க்கு குறைவான புள்ளிகளைப் பெறும் போட்டியாளர்கள் சான்றிதழ்ழைப் பெற்று கௌரவிக்கப்படும் தகுதியை இழப்பர்.

- அனைத்து வயதுப்பிரிவிலும், சகலபோட்டிகளில் மூன்றிற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு பற்றினால் மாத்திரமே தமிழாலய நிர்வாகத்தினால் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படுவார்கள் என்பதனை தாழ்மையுடன் அறியத்தருகிறோம்.

- **நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்துதல்:**

- தமிழ்த்திறன்போட்டி அன்று நடைபெறும் போட்டிகளை நிர்வாகியால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒருவர் நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்த வேண்டும். கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களைத் தவறாது நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்துதல் வேண்டும்.

    - அகவணக்கம், மற்றும் ஆரம்ப நிகழ்வுகள்
    - போட்டிகள் நடைபெறும் அறைகளின் ஒழுங்கமைப்புக்கள்
    - நடுவர்களாகச் செயலாற்ற வந்த ஆசிரியர்களின் குழுநிலைப்படங்கள்

- மனனப்போட்டி, உரையாற்றல், கவிதை, வாசிப்பு, சொல்வதெழுதுதல், உறுப்பமைய எழுதுதல் நடைபெறும்போது நிழற்படம் எடுத்தல் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.

| வயதெல்லைக் கணிப்பு அட்டவணை | | |
|---|---|---|
| வயதுப்பிரிவு | பிறந்த நாள் முதல் | வரை |
| 6 | 01.01.2013 | 31.12.2013 |
| 7-8 | 01.01.2011 | 31.12.2012 |
| 9-10 | 01.01.2009 | 31.12.2010 |
| 11-12 | 01.01.2007 | 31.12.2008 |
| 13-14 | 01.01.2005 | 31.12.2006 |
| 15-16 | 01.01.2003 | 31.12.2004 |
| 17-18 | 01.01.2001 | 31.12.2002 |

| போட்டிகளில் பங்கேற்கும் தகுதிபெற்ற வயதுப்பிரிவுகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வயதுப்பிரிவு<br>போட்டி | 6 | 7-8 | 9-10 | 11-12 | 13-14 | 15-16 | 17-18 |
| ஆத்திசூடி | ✓ | ✓ | | | | | |
| கொன்றைவேந்தன் | | | ✓ | | | | |
| நறுந்தொகை | | | | ✓ | | | |
| திருக்குறள் | | | | | ✓ | ✓ | ✓ |
| வாசிப்பு | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| சொல்வதெழுதுதல் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| உறுப்பமைய எழுதுதல் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| கட்டுரை | | | | | ✓ | ✓ | ✓ |
| உரையாற்றல் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| கவிதை | | | | ✓ | ✓ | ✓ | ✓ |
| ஓவியம் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

## மனனம்

- மனனமும் பொருள்கூறலும் பகுதிக்குள் வரும் **ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, திருக்குறள்** போன்ற விடயங்கள் அனைத்தும் இச்சுற்றறிக்கையுடன் சிறப்பான தொகுப்புக்களாக இணைக்கப்பட்டுள்ளன.
- மனனம் கூறும் போது உரையாற்றல் முறையில் அல்லாது இயல்பான முறையில் கூறப்படுதல் வேண்டும்.
- மனனப் போட்டிகளின்போது பங்குபற்றும் போட்டியாளர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

| வயதுப்பிரிவு | விடயம் | பாடல்கள் | பொருள் கூறுதல் |
|---|---|---|---|
| 6 | ஆத்திசூடி | 10 | xxxx |
| 7 - 8 | ஆத்திசூடி | 10 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 9 - 10 | கொன்றைவேந்தன் | 20 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 11 - 12 | நறுந்தொகை | 20 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 13 - 14 | திருக்குறள்: மருந்து | 10 | முதல் ஐந்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 15 - 16 | திருக்குறள்: நட்பு | 10 | முதல் ஐந்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 17 - 18 | திருக்குறள்: கல்லாமை | 10 | முதல் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |

மேலே குறிப்பிட்டதிற்கமைய குறள்கள் சொல்லப்படல் வேண்டும்.

**ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, திருக்குறள்:-**

இப்போட்டிகளுக்கு பொருள் கூறல் கேட்கப்படும்போது தனித்தனிச் சொற்களாகக் கேட்காது முழுச் சொற்றொடரையும் கூறிக் கேட்கப்படல் வேண்டும்.

## வாசித்தல்

| வயதுப்பிரிவு | பாடநூல்கள் | பாடல்கள் தவிர்த்து |
|---|---|---|
| 6 | வளர்தமிழ் பாலர்நிலை பாடநூல் | ⇒ முதல் 6 அலகுகளில் |
| 7 - 8 | வளர்தமிழ் 1 பாடநூல்<br>வளர்தமிழ் 1 வாசிப்புநூல் | ⇒ முதல் 7 அலகுகளில்<br>⇒ முதல் 8 விடயங்களுக்குள் |
| 9 - 10 | வளர்தமிழ் 3 பாடநூல்<br>வளர்தமிழ் 3 வாசிப்புநூல் | ⇒ முதல் 7 அலகுகளில்<br>⇒ முதல் 8 விடயங்களுக்குள் |
| 11 - 12 | வளர்தமிழ் 5 பாடநூல்<br>வளர்தமிழ் 5 வாசிப்புநூல் | ⇒ முதல் 6 அலகுகளில்<br>⇒ முதல் 8 விடயங்களுக்குள் |
| 13 - 14 | வளர்தமிழ் 7 பாடநூல்<br>வளர்தமிழ் 7 வாசிப்புநூல் | ⇒ முதல் 7 அலகுகளில்<br>⇒ முதல் 8 விடயங்களுக்குள் |
| 15 - 16 | வளர்தமிழ் 9 பாடநூல்<br>வளர்தமிழ் 9 வாசிப்புநூல் | ⇒ முதல் 5 அலகுகளில்<br>⇒ முதல் 5 விடயங்களுக்குள் |
| 17 - 18 | வளர்தமிழ் 11 பாடநூல்<br>வளர்தமிழ் 11 வாசிப்புநூல் | ⇒ முதல் 3 அலகுகளில்<br>⇒ முதல் 5 விடயங்களுக்குள் |

இப்போட்டிகளுக்கு மேற்குறிப்பிட்ட வயதுப் பிரிவுகளுக்கேற்ற பாடநூல்களிலிருந்து முதல் 8, 9 அலகுகளில் மாணவர்கள் தம்மைத் தயார் செய்தல் வேண்டும். (பாடல்கள் தவிர்த்து)

வாசிப்புப் போட்டியின்போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## எழுத்துப்போட்டிகள்

6, (7-8), வயதுப்பிரிவினர் அனைத்து எழுத்துப்போட்டிகளிலும் **கரிக்கோலால்** (பென்சிலால்) மட்டுமே எழுதுதல் வேண்டும். (9-10) தொடக்கம் (17-18) வரையிலான வயதுப்பிரிவினர் **எழுதுகோலால்** (பேனாவால்) மாத்திரமே எழுதுதல் வேண்டும். தேவையான எழுது கோல்களைப் போட்டியாளர்களே கொண்டுவருதல் வேண்டும்.

## சொல்வதெழுதுதல்

| வயதுப்பிரிவு | பாடநூல்கள் | விடயங்கள் |
|---|---|---|
| 6 | வளர்தமிழ் பாலர்நிலை பாடநூல் | ⇒ முதல் 6 அலகுகளில் ( பாடல்கள் தவிர்த்து ) |
| 7 - 8 | வளர்தமிழ் 1 பாடநூல்<br>வளர்தமிழ் 1 வாசிப்புநூல் | ⇒ முதல் 7 அலகுகளில் ( பாடல்கள் தவிர்த்து ) |
| 9 - 10 | வளர்தமிழ் 3 பாடநூல்<br>வளர்தமிழ் 3 வாசிப்புநூல் | ⇒ முதல் 7 அலகுகளில் ( பாடல்கள் தவிர்த்து ) |
| 11 - 12 | வளர்தமிழ் 5 பாடநூல்<br>வளர்தமிழ் 5 வாசிப்புநூல் | ⇒ முதல் 6 அலகுகளில் ( பாடல்கள் தவிர்த்து ) |
| 13 - 14 | வளர்தமிழ் 7 பாடநூல்<br>வளர்தமிழ் 7 வாசிப்புநூல் | ⇒ முதல் 6 அலகுகளில் ( பாடல்கள் தவிர்த்து ) |
| 15 - 16 | வளர்தமிழ் 9 பாடநூல்<br>வளர்தமிழ் 9 வாசிப்புநூல் | ⇒ முதல் 5 அலகுகளில் ( பாடல்கள் தவிர்த்து ) |
| 17 - 18 | வளர்தமிழ் 11 பாடநூல்<br>வளர்தமிழ் 11 வாசிப்புநூல் | ⇒ முதல் 5 அலகுகளில் ( பாடல்கள் தவிர்த்து ) |

இப்போட்டிகளுக்கு மேற்குறிப்பிட்ட வயதுப் பிரிவுகளுக்கேற்ற பாடநூல்களிலிருந்து முதல் 8, 9 அலகுகளில் மாணவர்கள் தம்மைத் தயார் செய்தல் வேண்டும். (பாடல்கள் தவிர்த்து) **சொல்வதெழுதுதல்:** 6, (7-8), (9-10) வயதுப்பிரிவினருக்கு சொல்வதெழுதுதல் சொல்லப்படும்போது குறியீடுகள் (காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி) சேர்த்துச் சொல்லப்படும். ஆனால் (11-12), (13-14), (15-16), (17-18) வயதுப்பிரிவினருக்கு அக்குறியீடுகள் கூறப்படமாட்டாது. இவ்வயதுப்பிரிவினர் தாங்களாகவே அக்குறியீடுகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## உறுப்பமைய எழுதுதல்

| வயதுப்பிரிவு | பாடநூல்கள் | அலகுகள் | நேரம் நிமிடங்கள் |
|---|---|---|---|
| 6 | வளர்தமிழ் பாலர்நிலை (எழுதுதல் நூல்) | ⇒ முதல் 6 | 20 |
| 7 - 8 | வளர்தமிழ் 1 (எழுதுதல் நூல்) | ⇒ முதல் 6 | 20 |
| 9 - 10 | வளர்தமிழ் 3 (எழுதுதல் நூல்) | ⇒ முதல் 7 | 20 |
| 11 - 12 | வளர்தமிழ் 5 (எழுதுதல் நூல்) | ⇒ முதல் 7 | 20 |
| 13 - 14 | வளர்தமிழ் 7 (எழுதுதல் நூல்) | ⇒ முதல் 5 | 20 |
| 15 - 16 | வளர்தமிழ் 9 (எழுதுதல் நூல்) | ⇒ முதல் 5 | 20 |
| 17 - 18 | வளர்தமிழ் 11 (வாசிப்புநூல்) | ⇒ முதல் 5 | 20 |

இப்போட்டிகளுக்கு மேற்குறிப்பிட்ட வயதுப் பிரிவுகளுக்கேற்ற பாடநூல்களிலிருந்து முதல் 8, 9 அலகுகளில் மாணவர்கள் தம்மைத் தயார் செய்தல் வேண்டும்.

## கட்டுரைப்போட்டி

- இப்போட்டியில் பங்குபற்றுவோருக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் 45 நிமிடங்களாகும். ஒவ்வொரு வயதுப்பிரிவினரும் எழுத வேண்டிய கட்டுரைத் தலைப்பும், சொற்களின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன.
- தலைப்பின் பொருள் விளங்க, குறிக்கப்பட்ட சொற்களின் எண்ணிக்கையை மீறாது கட்டுரை விதிகளை அனுசரித்துக் கட்டுரையை எழுதுதல் வேண்டும்.

| வயதுப்பிரிவு | விடயங்கள் | சொற்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 13 - 14 | அன்னைத் தமிழீழத்தின் அழகொளிரும் வளங்கள் | 125 |
| 15 - 16 | வள்ளுவம் காட்டும் அறவழி | 150 |
| 17 - 18 | சூழலைக் காப்போரே வாழ்வார் - மற்றெல்லாம் நோயதன் பின் சென்று மாள்வர் | 200 |

## உரையாற்றல்

- உரையாற்றலில் பேச்சுத்தெளிவு, கருத்துச்செறிவு, அவையோரைக் கவரும் தன்மை ஆகியவை அகத்தியமாக கவனிக்கப்படும். ஒவ்வொரு வயதுப்பிரிவினருக்குமான உரையாற்றும் விடயமும், நேரமும் கீழே தரப்பட்டுள்ளன. நேரம் முக்கியமாகக் கவனிக்கப்படும்.

- அவை வணக்கமும் குறிப்பிட்ட நேரத்திற்குள் அடங்கும்.

- **இவ்வுரையாற்றும்** போட்டிகள் தமிழாலயத்தின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் முன்னிலையில் நடுவர்களால் நடாத்தப்படவேண்டும்.

| வயதுப்பிரிவு | விடயங்கள் | நேரம் நிமிடங்கள் |
|---|---|---|
| 6 | *இனியமொழி! என் தாய்த்தமிழ்மொழி* | 3 |
| 7 - 8 | தமிழின் அழகு தனி அழகு | 3 |
| 9 - 10 | ஒற்றுமையை மனிதத்தின் பலம் | 3 |
| 11 - 12 | அழகிய நந்தவனம் எங்கள் தமிழாலயம்<br>அழகு தமிழை நுகரலாம் மகிழலாம் | 3 |
| 13 - 14 | தாராளமாய் உதவுவோம் தாயக<br>மனப்பாரங்களில் பங்குகொள்வோம் | 4 |
| 15 - 16 | இளைய தலைமுறையே எழு!<br>புதிய வரலாறு படை! | 4 |
| 17 - 18 | மொழியின்றி போனால் நம் இனமின்றி போகும்<br>மறந்திங்கு வாழ்ந்தால் எம் நிலையென்ன ஆகும் | 4 |

## கவிதை

கீழ் வரும் தலைப்புகளில் கவிதை அமைதல் வேண்டும். போட்டியில் பங்குகொள்ளும் போட்டியாளர்கள் தாங்கள் படிக்கப்போகும் கவிதையின் 4 பிரதிகளைப் போட்டியின்போது நடுவர்களிடம் ஒப்படைத்து நடுவர்களின் அனுமதியோடு ஒரு பிரதியை திருப்பிப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

- கவிதை பார்த்தும் படிக்கலாம்.
- அவைவணக்கம் கவிதைக்குள் அடங்காது.

| வயதுப்பிரிவு | விடயங்கள் | வரிகள் |
|---|---|---|
| 11 -12 | வலி சுமக்கும் மனது | 16 |
| 13 - 14 | பிள்ளை நேய நிலையங்களாய் அள்ளித் தமிழ் தரும் தமிழாலயம் | 18 |
| 15 - 16 | தோளைக் கொடுப்பாய் துயரைத் துடைப்பாய் | 18 |
| 17 - 18 | காலப் பெருவெளி நீளும் பொழுதிலும் மாயை இருளில் மங்கிடாது விடுதலை உணர்வு | 20 |

**கவிதைப்** போட்டிகள் தமிழாலயத்தின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் முன்னிலையில் நடுவர்களால் நடாத்தப்படவேண்டும்.



## மேலதிகப் போட்டி (ஓவியப்போட்டி)

தமிழ்த்திறன் போட்டிக்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள அளவுள்ள தாள்கள் தமிழாலய நிர்வாகத்தால் வழங்கப்படும்.

- இப்போட்டி தமிழத்திறன் போட்டிகளின் வயதுப்பிரிவு, விதிமுறைகளுக்கு உட்படவே நடாத்தப்படும்.
- இப்போட்டியிலும் அனைத்து மாணவர்களும் தவறாது பங்குபற்றுதல் வேண்டும்.
- ஒவ்வொரு மாணவரும் இப்போட்டியில் மேலதிகமாகப் பங்குபற்றலாம். (தமிழ்த்திறன் போட்டியில் பங்குபெறும் போட்டிகளின் எண்ணிக்கை இவ் எண்ணிக்கைக்குள் சேர்க்கப்படமாட்டாது).
- பெற்றோர், பார்வையாளர் அனுமதிக்கப்படமாட்டார்.
- ஓவியம் வரைவதற்கு வயதுப்பிரிவுக்கு ஏற்ப தாள்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
- எழுதும் கருவிகளையும், நிறந்தீட்டும் துணைக்கருவிகளையும் பயன்படுத்தி ஓவியம் வரைதல் வேண்டும். மேலதிகமாக எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது (அளவுகோல், வட்டாரி போன்றவை).

| வயதுப்பிரிவு | விடயங்கள் | நேரம் நிமிடங்கள் | தாளின் அளவு |
|---|---|---|---|
| 6 | கார்த்திகைப் பூ | 60 | A4 |
| 7 - 8 | பூந்தோட்டம் | 60 | A4 |
| 9 - 10 | மான்கூட்டம் | 60 | A3 |
| 11 - 12 | தமிழ்ப்பள்ளி (வகுப்பறை) | 60 | A3 |
| 13 – 14 | தமிழர் திருநாள் | 60 | A3 |
| 15 - 16 | துயிலும் இல்லம் | 60 | A3 |
| 17 - 18 | வாழைத்தோட்டம் | 60 | A3 |

**கவிதைப்** போட்டிகள் தமிழாலயத்தின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் முன்னிலையில் நடுவர்களால் நடாத்தப்படவேண்டும்

தமிழ்த்திறன் போட்டியில், பங்குபற்றி, முதல் மூன்று நிலைகளைப் பெறும் மாணவர்களுக்கு தமிழர் திருநாள் 2020 அன்று சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்படுவார்கள். அத்துடன் தமிழ்த்திறன் போட்டி அன்று, பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பங்கு பற்றியதற்கான சான்றிதழ்களுடன், பதக்கமும் தமிழாலயத்தில் வழங்கப்படும்.

தமிழ்த்திறன்போட்டி பற்றிய மேலதிக விபரங்களுக்கு காரியாலயத்துடன் (03023903161) அல்லது தமிழ்த்திறன் போட்டிச் செயற்பாட்டாளர் செல்வி ஆர்த்தி பாஸ்கரன் (தொலைபேசி: 03023903161) அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

சென்ற ஆண்டு எமது தமிழாலயத்தில் 160 மாணவர்கள் தமிழ்த்திறன்போட்டியிற் கலந்துகொண்டு தங்கள் தமிழ்த்திறனை வெளிப்படுத்தினர். அவர்களைத் தமிழாலய நிர்வாகத்தின் சார்பில் வாழ்த்துவதோடு, இவ்வாண்டும் அனைத்து மாணவர்களும் தமிழ்த்திறன் போட்டியிற் பங்குபற்றி உங்கள் தமிழ்த்திறனை வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

*பா. பாலச்சந்திரன்*
.........................
நிர்வாகி
தமிழாலயம் பேர்லின்

*பா. ஆர்த்தி*
...........................................
தமிழ்த்திறன் போட்டிச் செயற்பாட்டாளர்
தமிழாலயம் பேர்லின்